www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# தென்னிலங்கையில் பீதிகிளப்பிய பச்சைப் புலிகள்!

அரசியல் தொடர் — அற்புதன் எழுதுவது




## காட்டு வாழ்க்கை


இந்தியப் படையினர் யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த பின்னர் பிரபாகரனும், புலிகள் இயக்க முக்கிய தளபதிகளும் வன்னிக்காட்டுக்கு சென்றனர்.

யாழ் குடாநாட்டில் இருந்த வாழ்க்கை முறைக்கும் பின்னர் காட்டுக்குள் ஏற்படுத்திக் கொண்ட வாழ்க்கை முறைக்கும் இடையே வித்தியாசம் இருந்தது.

ஆரம்பத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலருக்கு காட்டு வாழ்க்கைக்கு பழக்கப்படுவது சிரமமாகவே இருந்தது. நகரப்பகுதியிலும், மக்கள் மத்தியிலும் இயங்கிப் பழக்கப்பட்ட உறுப்பினர்கள் புதிய சூழலுக்கு படிப்படியாக பழக்கப் படுத்தப்பட்டனர்.

இந்தியப் படை வடக்கு-கிழக்கு முழுவதையும் கைப்பற்றி நிலை கொண்டு விட்டது.

படைபலமும் பயங்கரமாக இருக்கிறது. இனிமேல் போரிடுவது முடியாத காரியம் என்று நம்பிக்கையிழந்து இயக்கத்தில் இருந்து வெளியேறியவர்களும் இல்லாமல் இல்லை.



ரோகனவிஜயவீர மனைவி பிள்ளைகளுடன்

முக்கிய உறுப்பினர்கள் சிலரே இந்தியப் படையினரிடம் சரணடையத் தொடங்கியதால் புலிகள் இயக்க கீழ்மட்ட உறுப்பினர்கள் பலருக்கு குழப்பமான நிலை ஏற்பட்டது.

சூழல் மாற்றத்தின்போது ஏற்படக் கூடிய நெருக்கடிகளையும், நம்பிக்கை யீனங்களையும் புலிகள் அமைப்பினரும் அப்போது சந்தித்துக் கொண்டிருந்தனர்.

புலிகள் இயக்கத்தின் கதை இத்தோடு முடிந்தது. இந்தியப் படையினர் எப்பாடு பட்டாவது புலிகளை ஒழித்துக்கட்டியே தீருவர் என்றுதான் பெரும்பாலான மக்களும்கூட நினைத்தனர்.

இச் சூழ்நிலையில் பிரபாகரனுக்கும் புலிகள் இயக்கத் தலைமைக்கும் பல்வேறு சவால்கள் காத்திருந்தன.

முதலில் இயக்கத் தலைமையை பாது காத்து தமது புதிய தளப்பகுதியை கெட்டிப்படுத்துவது.

அடுத்ததாக மக்களுக்கும், இயக்க உறுப்பினர்களுக்கும் நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் தாக்குதல்களை நடத்த வேண்டும்.

தொடர்பற்றுப்போன இயக்க அணிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது, புத்துணர்ச்சி ஊட்டுவது போன்ற பணிகளும் இருந்தன.

காட்டுக்குள் இருந்த உறுப்பினர்களுக்கு உணவுப் பற்றாக்குறையும் ஆரம்பத்தில் இருந்தது.

குடி தண்ணீருக்காக காட்டுப்பகுதியில் கிணறுகள் தோண்டவேண்டியிருந்தது. இருப்பிடங்களையும் அமைக்க வேண்டியிருந்தது.

வன்னி காட்டுப் பகுதிகள் மாத்தையாவுக்கு நன்கு பரிச்சயமானவை. அப்போது பிரபாகரனுக்கும், மாத்தையாவுக்கும் இடையே விரிசலுக்கான அறிகுறியே தோன்றாத காலம்.

## பிரபாகரனின் குடும்பம்

இந்தியப் படையோடு மோதல் தொடங்கி பிரபாகரன் வன்னிக் காட்டுப் பகுதிக்கு சென்றபோது பிரபாகரனின் குடும்பத்தினர் என்ன ஆகினர்?

அதுபற்றிப் பிரபாகரனே பின்னர் ஒரு முறை இவ்வாறு கூறியிருக்கிறார்: "இந்திய இராணுவம் எங்களை தீவிரமாக வேட்டையாடியபோது என் மனைவி மதிவதனியையும், குழந்தைகளையும் உறவினர் வீடுகளில் போய் இருக்கும்படி எவ்வளவோ கூறினேன். ஆனால் அவள் கேட்கவில்லை. என்னுடனேயே இருப்பேன் என்று பிடிவாதம் பிடித்தாள். பின்னர் குழந்தைகளை மட்டும் இயக்க ஆதரவாளர்களிடம் ஒப்படைக்க முடிவு செய்தோம்.

ஒரே இடத்தில் இரு குழந்தைகளையும் வைத்திருக்க விரும்பவில்லை. ஒன்றுக்கு ஏதேனும் நேர்ந்தால் மற்றொன்றாவது பிழைத்திருக்கட்டும் என எண்ணி மூத்தவனான சார்ள்ஸை ஒரு இடத்திலும், இளையவளான துவாரகாவை வேறு இடத்திலும் வளர்க்க ஏற்பாடு செய்தோம்.

முதலில் அதற்கு ஒப்புக்கொண்டு என்னுடன் வந்த மதிவதனி நாட்கள் செல்லச் செல்ல குழந்தைகளை எண்ணி புலம்பத் தொடங்கினாள். ஆயிரக்கணக்கான தமிழீழக் குழந்தைகளின் எதிர்காலம் என்னாகுமோ என்று தெரியாத நிலையில் உள்ளது. அவர்களுக்கு நடப்பதே நம் குழந்தைகளுக்கும் நடக்கட்டும் என்று கூறினேன். ஆனாலும் சில வேளைகளில் இரவு நேரங்களில் திடீர் என்று எழுந்து குழந்தைகளை நினைத்துக் கதறி அழுவாள்.

என்னைப் பிடிக்க முடியாத இந்திய இராணுவம் மதிவதனியையும், குழந்தைகளையும் எப்படியாவது கைது செய்ய வேண்டும் எனப் பெரு முயற்சி செய்தது" என்று கூறியிருக்கிறார் பிரபாகரன்.

பிரபாகரனின் இரண்டாவது குழந்தையான துவாரகா வயிற்றுப் போக்கு நோயினால் மரணமானதாகக் கதைகள் பரவியிருந்தன. அவை தவறான செய்திகளாகும்.

## பொறுப்பாளரின் சரணடைவு

கிட்டுவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தவர்களில் ஒருவர் அரியாலை, பாஷையூர் போன்ற பகுதிகளுக்கு பொறுப்பாக இருந்த மலரவன்.

இவர்தான் முன்னர் கிறிஸ்தவ மதகுரு ஒருவர் மூலமாக தன்னிடம் சரணடைந்த எட்வேர்ட் என்பவரை சித்திரவதை செய்து கொலை செய்தவர். அச் சம்பவம் தொடர்பாக முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்தியப் படையினர் யாழ்நகரைக் கைப்பற்றியவுடன் மலரவன் தன் குடும்பதினருடன் போய்ச் சேர்ந்து கொண்டார்.

இந்திய இராணுவத்தினர் முன்னேறிக் கொண்டிருந்தபோது நல்லூர் கந்தசாமி கோவில் அருகே தனது குடும்பத்தினருடன் ஒரு காருக்கு பின்னால் மக்களோடு மக்களாக மலரவன் ஒளிந்து கொண்டிருந்தார்.

பின்னர் வெளிநாடொன்றுக்கு தப்பிச் செல்வதற்காக தனது குடும்பத்தினருடன் புறப்பட்டார் மலரவன். மலரவனை இனம் கண்ட சிலர் இந்தியப் படையினருக்கு தகவல் கொடுத்தனர். மலரவன் கைது செய்யப்பட்டு இந்தியப் படையினரின் சிறையில் வைக்கப்பட்டார்.

இந்தியப் படையினர் மலரவனை விடுதலை செய்த பின்னர் தனது உயிருக்கு புலிகளால் ஆபத்து ஏற்படும் என்று பயந்து அவர் வெளிநாட்டுக்கு ஓடிவிட்டார்.

## பச்சைப் புலிகள்

1988ன் ஆரம்பத்தில் ஜே.வி.பி. இயக்கத்தினரின் நடவடிக்கைகள் தென்பகுதியில் தீவிரமாகின.

இராணுவத்தினரையும், பொலிசாரையும் மட்டுமல்லாமல், தங்கள் இயக்கத்தினருக்கு எதிரான அரசியல்வாதிகளையும் ஒழித்துக்கட்டத் தொடங்கியது ஜே.வி.பி.

இதேவேளையில் மற்றொரு திகில் செய்தியும் வெளியாகிக் கொண்டிருந்தது.

ஜே.வி.பி. உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் ஒரு குழுவினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். வீதிகளில் பிணமாக வீசப்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஜே.வி.பி.யினரை வேட்டையாடுவோராக தம்மைக் கூறிக்கொண்ட அக்குழுவினர் தமது இயக்கத்தின் பெயர் 'பச்சைப் புலிகள்' என்று அறிவித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் கொடியின் நிறம் பச்சை. எனவே பச்சைப் புலிகளுக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே நிச்சயம் தொடர்பிருக்க வேண்டும் என்று சந்தேகம் எழுந்தது.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மகனான ரவி ஜெயவர்த்தனாதான் விசேஷ அதிரடிப்படைக்கு பொறுப்பாக இருந்தார்.

அதனால் விசேஷ அதிரடிப்படையினர்தான் 'பச்சைப் புலிகள்' என்ற பெயரில் செயற்பட்டு சந்தேகப்படும் நபர்களை தீர்த்துக் கட்டுகிறார்கள் என்றும் கதைகள் உலாவத் தொடங்கின.

ஜே.வி.பி.யினரால் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கொலை செய்யப்பட்டனர். அதனால் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த ஒரு பிரிவினர் இணைந்து மக்கள் புரட்சிகர செம்படை என்ற அமைப்பை உருவாக்கினார்கள். அந்த அமைப்பே 'பரா' என்று சுருக்கமாக அழைக்கப்பட்டது.

சுதந்திர மாணவர் இயக்கம் என்னும் அமைப்பைச் சேர்ந்தவர்களே 'பரா'வின் முக்கிய உறுப்பினர்களாகவும் இருந்தனர். ஜே.வி.பி.க்கு பதிலடி கொடுக்கும் புரட்சிகர இராணுவ அமைப்பு தாங்கள்தான் என்று 'பரா' கூறிக்கொண்டது.

## பாதுகாப்பு

தென்னிலங்கை இடதுசாரி கட்சிகளுக்கு இயக்கங்களில் இருந்து வெளியேறிய தமிழ் இளைஞர்களும் பாதுகாப்பாளர்களாக செயற்பட்டனர்.

சுவரொட்டிகள் ஒட்டுவது போன்ற பணிகளில் இடதுசாரிக் கட்சியினர் ஈடுபடும்போது பாதுகாப்பளிப்பதும் அந்த இளைஞர்கள்தான். அரசியல் கட்சிகளின் பாதுகாப்புக்காக அரசாங்கம் கொடுத்த ஆயுதங்களை பயன்படுத்துமளவுக்கு தேர்ச்சி பெற்றவர்கள் இடதுசாரிக் கட்சிகளில் இருக்கவில்லை. அதனால் இயக்கங்களில் இருந்து வெளியேறி உதிரிகளாக கொழும்பில் நின்ற தமிழ் இளைஞர்களை அக்கட்சிகள் பயன்படுத்திக் கொண்டன.




ஜே.வி.பி.யினரும் தமிழ் இளைஞர்கள் சென்று இடதுசாரிக் கட்சிகளுக்காக சுவரொட்டிகள் ஒட்டியபோது தாக்குதல்களில் ஈடுபடாமல் தவிர்த்துக் கொண்டனர்.

அப்போதெல்லாம் கொழும்பில் சோதனைச் சாவடிகளில் சிங்கள இளைஞர்கள், யுவதிகளுக்குத்தான் கெடுபிடி.

அடையாள அட்டையில் தமிழர் என்று இருந்தால் சோதனையே கிடையாது.

## காட்டுக்குள் ஜே.வி.பி.

வடக்கு-கிழக்கில் புலிகள் எப்படிக் காட்டுப் பகுதிகளை நோக்கி பின்வாங்கினார்களோ, அதேபோல ஜே.வி.பி.யினரும் தென்னிலங்கைக் காட்டுப்பகுதிகளுக்குள் பதுங்கியிருந்தனர்.

ஜே.வி.பி. இயக்கத் தலைவரான ரோகன விஜய வீர தாடி மீசை எல்லாவற்றையும் மழித்துக்கொண்டு காட்டுப் பகுதிகளில் தலைமறைவாக இருந்தார்.

அப்போது புலிகளுக்கும், ஜே.வி.பி.க்கும் இடையே ஒரு ஒற்றுமை இருந்தது.

இரண்டு இயக்கங்களுமே இந்தியப் படையை வெளியேறுமாறு கோரிக் கொண்டிருந்தன.



காட்டுக்குள் தலைமறைவு வாழ்க்கை. வெள்ளைச் சட்டையுடன் இருப்பவர்தான் ரோகனவிஜயவீர.

(தொடர்ந்து வரும்)

# ஐ.நா சபையில் அதிரடிப் பாய்ச்சல்!

இம்முறை பிரிட்டிஷ் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இலங்கைத் தமிழர் கிருஷ்ணா வைகுந்தவாசன்.

இந்த வைகுந்தவாசன் பற்றி அன்றொரு நாள் அகில உலகமே பேசிக்கொண்டது. இலங்கைத் தமிழர்களும் வியந்து நின்றனர்.

அந்தநாள் 5.10.1978.

அன்றுதான் ஐக்கிய நாடுகள் சபைக்குள் அதிரடியாகப் புகுந்து தமிழீழப் பிரகடனம் செய்தார் வைகுந்தவாசன்.

ஐக்கிய நாடுகள் சபைக்குள் செல்வது சாதாரண காரியமல்ல. உலக நாடுகளின் தலைவர்களும், அமைச்சர்களும் உள்ளே செல்லலாம். வைகுந்தவாசன் ஒரு சாதாரண மனிதர். ஐ.நா.சபைக் காவலர்களின் கண்களிலேயே மண்ணைத் தூவிவிட்டு உள்ளே புகுந்தார் என்றால் நம்பவே முடியாத சாதனை அல்லவா.

பாலஸ்தீன விடுதலை இயக்கம்கூட பல்லாண்டுகாலமாக படாதபாடுபட்டு, பல நாடுகளின் கோரிக்கையின் பயனாகத்தான் ஐ.நா.சபைக்கு செல்ல முடிந்தது. யாசிர் அரபாத் அங்கு பேச முடிந்தது.

ஆனால் யாருடைய சிபாரிசும் இல்லாமல் ஐ.நா மேடையில் ஏறிப் பேசிவிட்டு இறங்கினார் வைகுந்தவாசன் என்றால் மனிதர் கில்லாடிதானே. இந்த அரசியல் தொடரில் நான் தவறவிட்ட அந்த அபூர்வ நிகழ்வை இப்போது தருகிறேன்.

அமெரிக்காவில் நியூயோர்க்கில் இருக்கிறது ஐக்கிய நாடுகள் சபை.

நீதிபதியாக இருந்து பின்னர் ஓய்வு பெற்று இலண்டனில் வழக்கறிஞராக பணியாற்றியவர் வைகுந்தவாசன்.

தன்னுடைய தொடர்புகள் மூலமாக ஐ.நா. சபையின் பார்வையாளர் பகுதிக்கு சென்று சபை நிகழ்ச்சிகளை பார்வையிடும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார். அப்போதுதான் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சபைக்குள் புகந்து பேசினால் என்ன என்ற யோசனை அவருக்குள் உதித்தது.

அதனைச் செயலாக்க படிப்படியாக முன்னேறினார். பலநாட்கள் சென்று பார்வையாளர் பகுதியில் இருந்தார். பின்னர் மெல்ல மெல்ல காவலர்களுக்கு பரிச்சயமான முகமாகிவிட்டதால் சபைக்கு வரும் உலகத் தலைவர்கள் அமரும் மண்டபத்துக்குள்ளும் தடை இன்றி செல்ல முடிந்தது.

இனி சபைக்குள் புகுந்துகொள்வது தான் பாக்கி. அதற்குரிய நாளும் வந்தது.

5.10.1978 அன்று ஐ.நா நிகழ்ச்சிகள் கொலம்பியா நாட்டுப் பிரதிநிதி தலைமையில் நடந்து கொண்டிருந்தன.

அமெரிக்கா, சோவியத் யூனியன் (அன்று) பிரிட்டன் உட்பட 150 நாடுகளின் தலைவர்கள் அமர்ந்திருந்தனர். பார்வையாளர் பகுதியில் சுமார் இரண்டாயிரம் பேர் அமர்ந்திருந்தனர்.

காலை நிகழ்ச்சியில் சைப்பிரஸ் நாட்டு தலைவரும், சூரினம் நாட்டுத் தலைவரும் பேசிமுடித்திருந்தனர். நண்பகல் இடைவேளைக்குப் பின்னர் ஒரே ஒரு நாட்டுப் பிரதிநிதிதான் பேசுவதாக இருந்தது.

அவர்தான் இலங்கைப் பிரதிநிதி. அன்று இலங்கைப் பிரதிநிதியாக கலந்து கொண்டவர் வெளிநாட்டு அமைச்சர் ஹமீட்.

'இப்போது இலங்கைப் பிரதிநிதி பேசுவார்' என்று அறிவிக்கப்பட்டது.

சபையிலிருந்து எழுந்தார் வைகுந்தவாசன். மிடுக்காக நடந்துபோய் மேடையில் ஏறினார். வணக்கம் சொன்னார். இலங்கைப் பிரதிநிதி என்ன பேசப் போகிறார் என்று கேட்க ஆவலாயிருந்தனர் பிரதிநிதிகள்.

எடுத்த வீச்சிலேயே இலங்கை அரசின் அடக்குமுறைகளைப் பற்றி சுருக்கமாக கூறிமுடித்தார். இது என்ன இலங்கை அரசின் பிரதிநிதியே தங்கள் அரசை சாடுகிறாரே! என்று பிரதிநிதிகளுக்கு ஆச்சரியம்.

அதேவேகத்தில் தன்னை தமிழீழத்தின் பிரதிநிதியாகவும், தன் பெயர் கிருஷ்ணா வைகுந்தவாசன் , என்றும் சொன்னவர் தமிழீழப் பிரகடனம் செய்வதாகவும் முழங்கினார். தமிழீழம் எங்கே இருக்கிறது என்றும் விளக்கினர்.



அன்னை இந்திராவுடன் வைகுந்தவாசன்

அப்போதுதான் விஷயம் புரிந்தது. சட்டென்று மைக்கை செயல் இழக்கச் செய்தனர். சபையெங்கும் ஒரே பரபரப்பு.

சபைக் காவலர்கள் பாய்ந்து சென்று வைகுந்தவாசனை குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

வைகுந்தவாசன் முகத்தில் மட்டும் தான் நினைத்ததை சாதித்துவிட்ட திருப்தி குடிகொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்